**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU.

(சாட்சிக்கு திரு.E.ஜெயவேல், தலைமை எழுத்தர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | | | |
|---|---|---|---|
| Sessions | ... | **SC.203/2021** | |
| Deposition of witness for | ..... | Prosecution | **P.W.6** |
| Name | : | திரு.ராஜாமணி | |
| Father's Name | : | திரு.குட்டியப்பன் | |
| Taluk | : | எண்.438/59, இந்திரா நகர், களத்துமேட்டு தெரு, செங்கல்பட்டு | |
| Age | : | 42 | |
| Date | : | 27.11.2025 | |

முதல் விசாரணை:

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் நான் ஊருக்கு சென்று விட்டு செங்கல்பட்டிற்கு வந்தபோது ரவிபிரகாஷ் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். நான் ஊரில் இல்லாத போது போலீசார் என் வீட்டிற்கு வந்து எனது விலாசத்தை கேட்டு சென்றார்கள். இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி இந்த நீதிமன்றத்தில் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

அப்பொழுது நான், கவுன்சிலர் சுரேஷ் அவர்களிடம் உதவியாளராக இருந்து வந்தேன் என்றும், 06.01.2012ம் தேதி மதியம் 3.00 மணியளவில் செங்கல்பட்டு, ரைட்டர் சபாபதி தெரு வழியாக நடந்து போய் கொண்டிருந்தேன் என்றும், என்னை கடந்து ஒரு கருப்பு நிற பொலிரோ கார், எனக்கு ஏற்கனவே தெரிந்த வரதன் குடியிருந்த வீட்டின் முன்பு வேகமாக போய் நின்றது என்றும், அதிலிருந்து பட்ரவாக்கம் சிவா தலைமையில் சுமார் 10 போ் கையில் கத்தியுடன் இறங்கி உள்ளே போனார்கள் என்றும், நான் என்னவென்று பின்னால் போய்

பார்த்தேன் என்றும், அங்கு வரதன் வீட்டு ஹாலில் சிவாவும், அவர் கூட வந்தவர்களும், செங்கல்பட்டு நகராட்சி துணை தலைவர் ரவிபிரகாஷை கத்தியால் சரமாரியாக வெட்டிக் கொண்டிருந்தார்கள் என்றும், அவர் அலறினார் என்றும், நான் பயந்து போய் மறைந்து நின்றுக் கொண்டேன் என்றும், ரவிபிரகாஷை வெட்டும்போது அந்த அறையின் மூலையில் வரதன், அஜீத்குமார், பழனி, கார்த்திகேயன் ஆகியோர்கள் பயந்து போய் நின்றுக் கொண்டிருந்தார்கள் என்றும், காரில் வந்தவர்கள் போன பின்பு மெதுவாக போய் பார்த்தபோது ரவிபிரகாஷ் ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார் என்றும், நான் பயந்து வீட்டிற்கு போய் விட்டேன் என்றும், பின்பு மருத்துவமனைக்கு போய் பிரேதத்தை பார்க்க போனபோது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சியாக நான் இருந்தேன் என்றும், எங்கள் முன்னிலையில் செங்கல்பட்டு தாலுக்கா ஆய்வாளர் பொறுப்பு செங்கல்பட்டு நகர காவல் நிலையம், செங்கல்பட்டு மருத்துவமனையின் பிணவறையின் முன்பு பிரேத விசாரணை செய்தார்கள் என்றும், நான் சாட்சியாக இருந்து இறந்துபோன ரவிபிரகாஷின் பிரேதத்தை அடையாளம் காட்டி உறுதி செய்து கையொப்பமிட்டேன் என்றும் ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU.

(சாட்சிக்கு திரு.E.ஜெயவேல், தலைமை எழுத்தர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | | | |
|---|---|---|---|
| Sessions | ... | **SC.203/2021** | |
| Deposition of witness for | ..... | Prosecution | **P.W.7** |
| Name | : | திரு.மகேஷ் | |
| Father's Name | : | திரு.ஆனந்த் | |
| Taluk | : | எண்.31சி, கைலாசநாதர் கோவில் தெரு, பெரிய நத்தம், செங்கல்பட்டு, | |
| Age | : | 43 | |
| Date | : | 27.11.2025 | |

முதல் விசாரணை:

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் சுகாதார பணி செய்து வருகிறேன். சுமார் 10, 12 வருடங்களுக்கு முன்னால் ஒரு நாள் நான் கேளம்பாக்கத்திற்கு வேலைக்கு சென்றுவிட்டு மறுநாள் மாலை வீட்டிற்கு வந்தேன். ரவிபிரகாஷ் என்பவரை கொலை செய்து விட்டதாக கேள்விபட்டேன். போலீசார் என் வீட்டிற்கு வந்து எனது விலாசத்தை கேட்டு சென்றார்கள். இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி இந்த நீதிமன்றத்தில் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

அப்பொழுது கடந்த 06.01.2012ம் தேதி மதியம் நான் வீட்டிலிருந்த போது 3.00 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி துணை தலைவர் ரவிபிரகாஷை, ரைட்டர் சபாபதி தெருவிலுள்ள வரதன் என்பவரின் வீட்டில் பட்ரவாக்கம் சிவா மற்றும் அவருடன் வந்த சுமார் 10 நபர்களும் சேர்ந்து முன்விரோதம் காரணமாக கத்தியால் சரமாரியாக வெட்டி கொலை செய்து விட்டு தப்பி சென்றுவிட்டதாக தகவல் கிடைத்தது என்றும், நான் உடனே ரவிபிரகாஷின் பிரேதத்தை பார்க்கலாம் என்று போனபோது போலீசார் பிரேதத்தை செங்கல்பட்டு அரசு

மருத்துவமனைக்கு எடுத்து போய் விட்டதாக சொன்னார்கள் என்றும், நான் மருத்துவமனைக்கு உடனே போனேன் என்றும், அங்கே செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனையில் பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சியாக நான் இருந்தேன் என்றும், எங்கள் முன்னிலையில் செங்கல்பட்டு தாலுக்கா ஆய்வாளர் பொறுப்பு செங்கல்பட்டு நகர காவல் நிலையம், செங்கல்பட்டு மருத்துவமனையின் பிணவறையின் முன்பு பிரேத விசாரணை செய்தார்கள் என்றும், நான் சாட்சியாக இருந்து இறந்துபோன ரவிபிரகாஷின் பிரேதத்தை அடையாளம் காட்டி உறுதி செய்து கையொப்பமிட்டேன் என்றும் ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை